# நீ முடித்துத் தீருமட்டும் அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார். 1 நாளா 28 : 20

**கர்த்தர் என்னும் தேவன் உன்னோடே இருப்பார்**

**கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கெடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்து தீருமட்டும் அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்**

வாக்குத்தத்த வசனத்தை வாஞ்சையோடு வாசிக்கும் நண்பரே,

கர்த்தருடைய ஊழியத்திற்கான வேலைகளை நீ முடித்து தீருமட்டும் அவர் உன்னை கைவிடமாட்டார்.
**மத். 28 : 20** கூறுகிறது, இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்

**ஏன் இந்த வாக்குத்தத்தத்தை கொடுத்தார்.**

அவருடைய வேலைகளைச் செய்வதற்காக அல்லவா ?

“நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்” என்றார். அப்படி சீஷராக்கும் பணியில் நீ ஈடுபட்டிருப்பாயானால், தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம், இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் – என்பதாகும்.

**இதைப் போலத்தான், 1 நாளாகமம் 28 : 20 கூறுகிறது,**

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி, நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி, நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு. தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்.

**மீண்டுமாக சொல்லிப் பார்ப்போம். என் தேவன் என்னோடே இருப்பார்.**

வாக்குத்தத்தத்தை வாஞ்சையோடு வாசிக்கும் நண்பரே,

இந்த மாதத்தில் விசேஷமாக, என் தேவன் உன்னோடே இருப்பார் – என வாழ்த்துகிறேன். ஏனெனில், நீங்கள் கர்த்தருடைய ஆலயத்தையும் ஊழியத்தை கட்டுகிறதற்கடுத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளீர்கள் – அல்லேலுயா !
ஆதலால், சகல கிரியைகளையும் (வேலைகளையும்) நீ முடித்து தீருமட்டும் அவர் உன்னை விட்டு விலகவுமாட்டார். உன்னைக் கைவிடவுமாட்டார்.

**உங்கள் விசுவாசத்தை கீழ்க்கண்டவாறு அடிக்கடி அறிக்கை செய்யுங்கள்.**

**நான் முடித்து தீருமட்டும், அவர் என்னைவிட்டு விலகவுமாட்டார், என்னை கைவிடவுமாட்டார்.**

பாதியில் நின்றுபோய் விடுமோ அல்லது முடிக்காமல் போய்விடுவேனோ என்று பயப்படும் சகோதரியே, தேவனுடைய வார்த்தை உன்னை தேற்றுவதற்காகவே கடந்து வருகிறது.

**பக்தன் பாடுகிறார்**

சத்துரு தலை கவிழ்ந்தோட, நித்தமும் கிரியை செய்திடும்
என்னை தேற்றிடும் அடையாளம், இயேசுவே இன்று காட்டிடுமே

நிச்சயமாக சத்துரு தலை கவிழ்ந்து ஓடுவான். உன்னை தேற்றும் அடையாளத்தை இயேசு இன்றே காட்டுவார். விசுவாசிப்பாயா ? ஆதலால் கர்த்தருடைய வேலையை நிறுத்தவேண்டாம். தொடர்ந்து செய், நம்பிக்கையுடன் செய், முழு மனதுடன் செய், விசுவாசத்துடன் செய், பலன் கிட்டுவது நிச்சயம்.

**கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை**

**இராஜ்ய மேன்மைக்காய் கஷ்டமடைந்தோர் நஷ்டப்பட்டதில்லை**

கர்த்தருக்குப் பிரியமான காரியம் **சுவிசேஷத்தை அறிவிப்பதும் – ஆலயத்தைக் கட்டுவதுமாகும்.**
**ஏசாயா 52 : 7 கூறுகிறது,** சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, ரட்சிப்பை பிரஸ்தாபப்படுடத்தி உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்கு சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன – என்பதாக.
இதிலிருந்து சுவிசேஷ ஊழியத்தின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.
என் அன்பு நண்பரே,

நீவீர் உம்முடைய வாழ்க்கையில் கர்த்தருக்காக ஒரு ஆலயம் முழுமையாக கட்டி கொடுத்த அனுபவம் உண்டா ? இல்லை என்றாலும் / ஆம் என்றாலும் இந்த ஆண்டிலும் இந்த நல்ல வேலைக்கு உங்கள் கையை திடப்படுத்துங்கள்.

**நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னை விட்டு விலகவுமாட்டார், உன்னை கைவிடவுமாட்டார். – ஆமென்.**